திரு. என். டென்னிஸ் : இந்தத் திட்டம் எப்போது முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எப்போது முடிவு அடையும் என்ற தகவல் இல்லை. நீர் நின்றவுடன் வேலை துவங்கப்படும் என்ற குறிப்பு இருக்கிறது.

தானிப்பாடியருகே வரட்டாற்றின் குறுக்கே அணை.

* 75 வினா.—**திரு. எம். எஸ். இராதாகிருட்டினன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்திற்கு தெற்கே உள்ள வரட்டாற்றில் புதிய அணை ஒன்று கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) செங்கம் வட்டம் தானிப்பாடி கிராமத்திற்கு தெற்கே உள்ள வரட்டாற்றில் ஒரு புதிய அணை கட்டும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 1,84,600-க்கு அரசு அங்கீகாரம் கொடுத்துள்ளது. இத்திட்டத்தினால் 176 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு டன் உணவின் விலை ரூ. 1,048 ஆகும்.

Sulagiri Dam

*76 *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the investigation work of the construction of Vempatti Dam near Sulagiri village in Hosur taluk stands; and

(*b*) the total number of acres which can be brought under irrigation under this scheme?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஓசூர் தாலுக்கா எம்பள்ளி கிராமத்தருகில் சூளகிரி சின்னாற்றின் குறுக்கே ஓர் நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் உள்ளது. இத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகளும் வரைபடங்களும் பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சுமார் ... ஏக்கர் புதிய நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

THIRU K. KOTHANDERAMIAH: Sir Sulagiri area where it is proposed to do this work is a Zamindari area. Even in the Governor's address it has been stated that Government are taking steps to do such work in Zamindari areas. May I know from the Hon. Minister for Public Works and when the work will be completed?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் விரிவான ஆய்வில் இருக்கிறது. அங்கிருந்து சிபார்சு போர்டுக்கு வந்து, ரெவின்யூ போர்டில் இருந்து அரசுக்கு வந்தவுடன், அதனைப் பரிசீலனை செய்து ஆணை பிறப்பிக்கப்படும்.

கடம்பாகுளம் தலை மதகினை அகலப்படுத்தல்

*77 வின—**திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதியிலுள்ள கடம்பாக்குளத்தின் தலை மதகினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம். அரசு ஆணை எண் 1399, பொதுப்பணித்துறை, நாள் 3—9—1973-ல் கடம்பாக் குளத்தின் பொறையூர் தலை மதகினில் மேலும் நான்கு புதிய கண்ணறைகள் (Vents) அமைக்க ரூ. 3.35 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இவ்வேலை வரும் ஏப்ரல் மாதங்களில் அதாவது பாசனத்திற்கு விடப்படும் தண்ணீர் நிறுத்தப்படும் காலத்தில், ஆரம்பிக்கப்படும்.

பொதுப் பணித்துறை இளநிலைப் பொறியாளர்களது பணிகள்

*78 வின—**திரு. மே. சி. தூமணி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் பொதுப் பணித்துறை நெடுஞ்சாலைத் துறை முதலியவற்றில் 500-க்கும் மேற்பட்ட இளம் பொறியாளர்களது பணி வரன் முறைபடுத்தப்படாமல் உள்ளதா?